# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1979/30 - 2016 අගෝස්තු මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.08.11

*1979/30 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி- 3/2013*

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுக மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*அர்ஜுன ரணதுங்க,*
*துறைமுக மற்றும் கப்பற்றொழில்அமைச்சர்.*

கொழும்பு,
*2016, யூன் 23.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கொள்கலத்தின் முழு மொத்த திரண்மத்தைச் சரிபார்த்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1960 ஆம் ஆண்டு யூன் 17 ஆந்தேதியன்று லண்டனில் கையொப்பமிடப்பட்ட கடலில் உயிர் காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் மாற்றீடாகக் கப்பற்சரக்கைக் கொண்டு செல்கின்ற கொள்கலத்தின் சரிபார்க்கப்பட்ட முழுமொத்தத் திரண்மம் தொடர்பாக, இவ்வொழுங்குவிதிகள் 1974 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆந்தேதியன்று நிறைவேற்றப்பட்டதும், 1980 ஆம் ஆண்டு மே 25 ஆந்தேதியன்று வலுவுக்கு வந்ததும், 1983 ஆம் ஆண்டு ஓகத்து 30 ஆந்தேதியன்று இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், 1983 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆந்தேதியன்று வலுவுக்கு வந்ததுமான 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர் காப்புக்கான சர்வதேசச் சமவாயத்துக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், பின்வருவன தவிர, 1972 ஆம் ஆண்டின் பாதுகாப்பான கொல்கலங்களுக்கான சமவாயம் ஏற்புடையதாகின்ற எல்லாக் கொள்கலன்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) குறுகியகாலச் சர்வதேசப் பயணங்களில் ஈடுபட்டுள்ள றோ-றோ கப்பலின் மீது செலுத்தப்படவேண்டிய ஓர் அடிச்சட்டத்தின் மீது அல்லது இழுவைக்கலத்தின் மீது பொதியிடப்பட்ட கொள்கலன்;

(ஆ) கப்பலில் ஏலவேயுள்ள கொள்கலத்தினுள் பொதியிடப்படுவதற்காகக் கப்பற்றலைவருக்குக் கப்பலேற்றுபவரினால் அளிக்கப்பட்ட கப்பற்சரக்கு இனங்கள் ; அத்துடன்

(இ) திறந்த கடலில் கையாளப்பட்ட கரைகடந்த கொள்கலன்களின் அங்கீகாரத்துக்கான வழிகாட்டுநெறிகளுக்கும் (Msc/சுற். 860) மற்றும் திருத்தப்பட்டவாறான, 1972 ஆம் ஆண்டின் பாதுகாப்பான கொள்கலன்களுக்கான சர்வதேசச் சமவாயத்தின் (CSC.1/சுற்.138/மீளாய்வு 1) சுமுகமாக்கப்பட்ட பொருள்கோடலும் அமுலாக்கலும் பற்றிய மீளாயப்பட்ட விதப்புரைகளுக்கும் இணங்க, 1972 ஆம் ஆண்டின் பாதுகாப்பான கொள்கலன்களுக்கான சர்வதேசச் சமவாயம் ஏற்புடையதாகாத கரைகடந்த கொள்கலன்கள்.

பாகம் I

**கொள்கலத்தின் முழுமொத்தத் திரண்மத்தைச் சரிபார்ப்பவர்**

4. (1) (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அந்நோக்கத்துக்காக வழங்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின் கீழனறி ஆளெவரும் கொள்கலத்தின் முழுமொத்தத் திரண்மத்தைச் சரிபார்ப்பவர் என்ற தொழிலைத் தொழிற்படுத்துதலோ அல்லது அதில் ஈடுபடுதலோ ஆகாது.

(2) இவ்வொழுங்குவிதிகளின் 15 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறு 1 ஆம் இலக்க முறை அல்லது 2 ஆம் இலக்க முறை அல்லது இரு முறைகளின் கீழும் கொள்கலத்தின் முழுமொத்தத் திரண்மத்தைச் சரிபார்ப்பவர் என்ற தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதற்கான உரிமமொன்றுக்காக விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்-

(அ) இலங்கை அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சரிபார்த்தற் சான்றிதழ் ;

(ஆ) இலங்கை அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைத் திணைக்களத்தினால் அல்லது இலங்கைத்தராதர அங்கீகாரச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அளவுத்திருத்தச் சான்றிதழ் ;

(இ) சரிபார்த்தல் முழுமொத்தத் திரண்மச்சான்றிதழை வழங்குவதற்குத் தகைமைபெற்ற ஆளொருவரை நியமிக்கின்ற கடிதம் ; அத்துடன்

(ஈ) 2 ஆம் இலக்க முறைக்காகத்தராதர முகாமைத்துவ முறைமை சநிஒ நியமங்களின் அல்லது சாதனப் பேணுகை நடவடிக்கை முறைகளின் மற்றும் ஒவ்வாமை நடவடிக்கை முறைமைகளின் பாகமாகக் கணக்காய்வு செய்யப்பட்ட சான்றிதழின் பிரதி.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும், தேவைப்படுத்தப்பட்ட எல்லா விபரங்களும் பற்றிய பூரணமானவையும் செம்மையானவையுமான தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவல்களையும் விபரங்களையும் கவனத்துட்கொண்ட பின்னரும், இவ்வொழுங்குவிதியின் கீழான உரிமமொன்று வழங்கப்படுவதற்கான பொருத்தமாந்தன்மை தொடர்பான தேவைப்பாடுகளை விண்ணப்பகாரர் நிறைவேற்றியுள்ளவிடத்தும், அத்தகைய உரிமத்தை விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.

(5) பொய்யான, பிறழ்வழியுய்க்கின்ற அல்லது பிழையான தகவல்களை அல்லது விபரங்களைக் கொண்டுள்ளதெனக் காணப்படும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

5. நான்காம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் -

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும் ;

(இ) உரிமத்தில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்கு வலுவிருத்தல் வேண்டும்.

6. (1) நான்காம் ஒழுங்குவிதியில் வழங்கப்பட்ட உரிமமொன்று,பணிப்பாளர் தலைமையதிபதிக்கு இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் அந்நோக்கத்துக்கான விண்ணப்பமொன்று முன்னர் வழங்கப்பட்ட உரிமம் முடிவுறும் தேதிக்கு முன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல் புதிப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படுவதன் மேல் புதுப்பிக்கப்படலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல் உரிமமொன்றைப் புதிப்பிக்கலாம்-

(அ) உரிமம் பெற்றவர் வழங்கப்பட்ட உரிமத்தின் நியதிநிபந்தனைகளை மீறியிராதவிடத்து அல்லது அவற்றுக்கு முரணான எதனையும் செய்திராதவிடத்து; அல்லது ;

(ஆ) உரிமம்பெற்றவர் வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளை மீறியிராதவிடத்து,

7. நான்காம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று-

(அ) வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழான அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழான தவறொன்றைப் புரிந்தமைக்காக உரிமம் பெற்றவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(ஆ) உரிமம் பெற்றவர் வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் எவைனேும் ஒழுங்குவிதிகளை மீறியிருந்து அத்தகைய மீறுகையின் பாரதூரமானதன்மை உரிமத்தின் இல்லதாக்குகையை அனுமதிக்காதவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியினால் இடைநிறுத்தப்படலாம்.

8. (1) நான்காம் ஒழுங்குவிதியில் வழங்கப்பட்ட உரிமமொன்று பின்வருமிடத்துப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இல்லாதாக்கப்படுதல் வேண்டும்-

(அ) பொய்யான, பிழைவழியுய்க்கின்ற அல்லது செம்மையற்ற தகவல்களை வழங்கியதன் மூலம் உரிமம் பெறப்பட்டிருந்ததெனக் காணப்படுமிடத்து;

(ஆ) வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழான அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்கு உரிமம் பெற்றவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்தும்;

(இ) அத்தகைய உரிமம் எந்த நியதிநிபந்தனைகளுக்கமைய வழங்கப்பட்டதோ அந்த எவையேனும் நியதிநிபந்தனைகளை உரிமம்பெற்றவர் மீறியுள்ளவரிடத்தும் அல்லது அவற்றுக்கு முரணாகச் செயலாற்றியுள்ளவிடத்தும்.

(2) வழங்கப்பட்ட உரிமமொன்று, விடயத்துக்கேற்ற, 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அல்லது இவ்வொழுங்குவிதியின் கீழ் இடைநிறுத்தப்படுமிடத்து அல்லது இல்லாதாக்கப்படுமிடத்து, உரிமம்பெற்றவரினால் கொடுக்கப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்பப்பட்ட எழுத்திலான தொடர்பாடலின் மூலம் அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகை பற்றி உடனடியாக உரிமம்பெற்றவருக்கு அறிவிப்பது பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

9. விடயத்துக்கேற்ப, 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழான அல்லது 6 ஆம் ஒழுங்குவிதியின் கீழான உரிமமொன்றை வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் ஒன்று மறுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய மறுப்புக்கான காரணங்கள், வழங்குகைக்கான அல்லது புதுப்பித்தலுக்கான அத்தகைய விண்ணப்பம் அவருக்குச் செய்யப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியினால் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய மறுப்புக்கான காரணங்களை விண்ணப்பத்தில் காணப்படும் முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்பப்படும் எழுத்திலான தொடர்பாடலின் மூலம் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்கின்ற ஆளுக்கு அறிவித்தல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

10. ஓராம் இலக்க முறையை அல்லது 2 ஆம் இலக்க முறையைப் பயன்படுத்துவதற்கு உரிமம்வழங்கப்பட்டுள்ள எவரேனுமாள் ஒரு தரவுத்தளத்தில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். இத்தரவுத்தளமானது அங்கீகரிக்கப்பட்ட கப்பலேற்றுபவர்களுக்கும் ஏற்றிச்செல்வோருக்கும் (கப்பற்றொழிற் கம்பெனிகள்) மற்றும் துறைமுக அல்லது முடிவிடத் தொழிற்படுத்துநர்களுக்கும் அணுகத்தக்கதாகவிருத்தல் வேண்டும்.

## பாகம் II

## கொள்கலங்களை ஏற்றிச்செல்வோர்

11. (1) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அந்நோக்கத்துக்காக வழங்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின் கீழன்றி ஆளெவரும் முதன்மை இயங்கிகள், லொறிகள் அல்லது இழுவண்டிகள் உட்பட கொள்கலப் பண்டமாற்றுத் தொழிலர் என்ற தொழிலைத் தொழிற்படுத்துதலோ அல்லது அதில் ஈடுபடுதலோ ஆகாது.

(2) முதன்மை இயங்கிகள், லொறிகள் அல்லது இழுவண்டிகள் உட்பட கொள்கலப் பண்டமாற்றுத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு விரும்புகின்ற எவரேனுமாள் பின்வரும் ஆவணங்களுடன்சேர்த்து பொருளளவில் இதற்கான அட்டவணை III இல் தரப்பட்டுள்ள படிவத்தில் அதன்சார்பிலான உரிமத்துக்கான விண்ணப்பமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்தல் வேண்டும்-

(அ) வாகனப்பதிவுச் சான்றிதழின் பிரதி ;

(ஆ) காப்புறுதியின் பிரதி;

(இ) சொத்தாண்மையின் முழுமையான வகை ; அத்துடன்

(ஈ) நிறுக்கும் பாலத்தைத் தொழிற்படுத்துபவரினால் அங்கீகரிக்கப்பட்ட எடை சரிபார்த்தற் சான்றிதழ்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் தேவைப்படுத்தப்பட்ட எல்லா விபரங்களும் பற்றிய பூரணமானவையும் செம்மையானவையுமான தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவல்களையும் விபரங்களையும் கவனத்துட்கொண்டபின்னரும், இவ்வொழுங்குவிதியின் கீழ் உரிமமொன்று வழங்கப்படுவதற்கான பொருந்துமாந்தன்மைபற்றிய தேவைப்பாடுகளை விண்ணப்பகாரர் நிறைவேற்றியுள்ளவிடத்தும்,விண்ணப்பகாரருக்கு அத்தகைய உரிமத்தை வழங்கலாம்.

(5) பொய்யான, பிழைவழியுய்க்கின்ற அல்லது பிழையான தகவல்களை அல்லது விபரங்களைக் கொண்டுள்ளதெனக் காணப்படும் விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

12. ஒழுங்குவிதிகள் 5,6,7,8 மற்றும் 9 என்பவற்றின் ஏற்பாடுகள், இப்பாகத்தின்கீழான உரிமம் தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் III

## பொது

13. கப்பலேற்றுபவர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாதல் வேண்டும்-

(அ) கப்பற்சரக்கை ஏற்றிச்செல்கின்ற கொள்கலத்தின் முழுமொத்தத் திரண்மத்தைச் சரிபார்ப்பதற்காகவும்; அத்துடன்

(ஆ) சரிபார்க்கப்பட்ட முழுமொத்தத் திரண்மம், போதியமுறையில் முற்கூட்டியே கப்பலேற்றல் ஆவணங்களில் தெரிவிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும்.

14. பொதியிடப்பட்ட கொள்கலத்தின் சரிபார்க்கப்பட்ட முழுமொத்தத் திரண்மத்தை கப்பலேற்றுபவரின் ஆவணத்தின் மூலம் வழங்குவதற்குத் தவறுகையில், கொள்கலத்தின் சரிபார்க்கப்பட்ட முழுமொத்தத் திரண்மத்தைக் கப்பற்றலைவர் அல்லது அவரது பிரதிநிதி முற்கூட்டியே பெற்றிருந்தாலொழிய,கொள்கலமெதுவும் கப்பலின் மீது ஏற்றப்படுதலாகாது.

15. பொதியிடப்பட்டவொரு கொள்கலத்தின் சரிபார்க்கப்பட்ட முழுமொத்தத் திரண்மத்தைப் பெறுகின்ற நோக்கத்துக்காக, பின்வரும் இருமுறைகள் இருத்தல் வேண்டும்-

(அ) 1 ஆம் இலக்க முறை எனவறியப்படும் அளவுத்திருத்தஞ்செய்யப்பட்டுச் சரிபார்க்கப்பட்ட நிறுக்கும் சாதனத்தைப் பயன்படுத்தி பொதியிடப்பட்ட கொள்கலத்தை நிறுத்தல்; அத்துடன்

(ஆ) 2 ஆம் இலக்க முறை எனவறியப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்தப்பட்ட முறைமையைப் பயன்படுத்தி கொள்கலத்தில் பொதியிடப்படவேண்டிய கவைதூக்கிகள், முட்டைஇடைச்செருகுகட்டைகள் மற்றும் வேறு பிணக்கும் பொருட்களின் திரண்மம் உட்பட, எல்லாப்பொதிகளையும் கப்பற்சரக்கு இனங்களையும் நிறுத்தலும், கொள்கலத்தின், கொள்கலனிறைத்திரண்மத்தைத் தனி முழுமொத்தங்களின் தொகையுடன் சேர்த்தலும்.

16. (1) பொதிகளினதும் கப்பற்சரக்கு இனங்களினதும் செம்மையான முழுமொத்தம் அவற்றின் மேற்பரப்புகளில் தெளிவாகவும் நிரந்தரமாகவும் குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட, மூல இலச்சினையிடப்பட்ட பொதிகள், அவை கொள்கலத்தினுள் பொதியிடப்படும் போது மீண்டும் நிறுக்கப்படுதலாகாது.

(2) கழிவு உலோகம், பையிலிடப்படாத தானியம் மற்றும் வேறு தொகையான கப்பற்சரக்குப் போன்ற குறித்தசில வகையினவான கப்பற்சரக்கு இனங்கள், கொள்கலத்தில் பொதியிடப்படவேண்டிய இனங்களின் தனித்தனியான நிறுவைக்கு இலகுவாக உட்பட்டனவாகவிராதவிடத்து, 2 ஆம் இலக்க முறை தோதற்றதாகவும் செயல்முறைக்கு உகந்தல்லாததாகவும் இருக்கலாம்; இதற்குப்பதிலாக 1 ஆம் இலக்க முறை பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) 2 ஆம் இலக்க முறையின் கீழ் கொள்கலத்தின் உள்ளீடுகளை நிறுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறை, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறு சான்றுப்படுத்துகைக்கும் அங்கீகாரத்துக்கும் அமைந்தாதல் வேண்டும்.

17. இவ்வொழுங்குவிதிகளின் கீழான ஒவ்வொரு சேவை வழங்குநரும், பொதுமக்களின் நலன்கருதி பணிப்பாளர் தலைமையதிபதியினால் காலத்துக்காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய வழிகாட்டுநெறிக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

18. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுதிதினாலொழிய-

"அளவுத்திருத்தஞ்செய்யப்பட்டுச் சான்றுப்படுத்தப்பட்ட சாதனம்" என்பது, இலங்கை அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைத் திணைக்களத்தின் செம்மை நியமங்களையும் தேவைப்பாடுகளையும் திருப்திசெய்கின்ற, பொதியிடப்பட்ட கொள்கலத்தின் அல்லது பொதிகளினதும் கப்பற்சரக்கு இனங்களினதும், கவைதூக்கிகளின், முட்டை இடைச்செருகுகட்டைகளின் மற்றும் வேறு பொதியிடும் அத்துடன் பிணைக்கும் பொருட்களின் உண்மையான முழுமொத்தத் திரண்மத்தைத் தீர்மானிக்க இயன்றதாகவுள்ள தராசு, நிறுக்கும் பாலம், உயர்த்தும் சாதனம் அல்லது வேறேதேனும் உபாயம் என்று பொருளாகும்;

"கப்பற்சரக்கு இனங்கள்" என்பது, திருத்தப்பட்டவாறான, 1972 ஆம் ஆண்டின் பாதுகாப்பான கொள்கலன்களுக்கான சர்வதேசச் சமவாயத்தில் "கப்பற்சரக்கு" என்ற பதத்தைப்போன்று அதே பொதுவான பொருளைக் கொண்டுள்ளதுடன், ஏற்றிச்செல்லல் ஒப்பந்தமொன்றைப் பின்பற்றிக் கொள்கலன்களில் ஏற்றிச்சொல்லப்படும் எவையேனும் பண்டங்கள் விற்பனைப் பொருட்கள், வணிகப்பொருட்கள், திரவங்கள், வாயுக்கள், திண்மங்கள் மற்றும் எத்தகையவையுமான எவ்வகையினவான எவ்வாறாயினும், கொள்கலன்களில் ஏற்றிச்செல்லப்படும் கப்பலின்

உதிரிப்பாகங்களும் களஞ்சியப்பொருட்களும் உட்பட, கப்பலின் சாதனங்களும்கப்பலின் வழங்கல்களும் கப்பற்சரக்காகக் கொள்ளப்படுவதில்லை;

''கொள்கலன'' என்பது, திருத்தப்பட்டவாறான, 1972 ஆம் ஆண்டின் பாதுகாப்பான கொள்கலன்களுக்கான சர்வதேசச் சமவாயத்தில் ''கொள்கலன்'' என்ற பதத்தைப் போன்று அதே பொருளைக் கொண்டுள்ளதுடன்,-

(அ) நிரந்தரமான பண்பினதானதும் அதற்கிணங்க மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவதற்குப் பொருத்தமானவகையில் போதியளவு பலமாகவுள்ளதும்;

(ஆ) இடைப்போக்கிலான மீள்ஏற்றுதலின்றி, ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட இடப்பெயர்வு முறைகள் மூலம் பண்டங்களை இடம்பெயர்ப்பதனை வசதிப்படுத்துவதற்கு விசேடமான முறையில் வடிவமைக்கப்பட்டதும்;

(இ) பிணைக்கப்படும் அல்லது உடனடியாகக் கையாளப்படும் நோக்கங்களுக்காக மூலைப்பொருத்திகளை கொண்டதாக இந்நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்டதும்; அத்துடன்

(ஈ) நான்கு வெளிப்புற அடிப்பக்க மூலைகளினால் உள்ளடக்கப்பட்ட பரப்பளவு, ஒன்றில்:

(i) குறைந்தபட்சம் 14$M^2$ (150சதுர அடி) ;அல்லது

(ii) அது மேல் மூலைப்பொருத்திகளுடன் பொருத்தப்பட்டிருப்பின், குறைந்தபட்சம் 7$M^2$ (75 சதுரஅடி) என்பதாகவுள்ள அத்தகைய அளவினதும்;

''முழுமொத்தத் திரண்மம்'' என்பது. கொள்கலத்தினுள் பொதியிடப்பட்ட கவைதூக்கிகள், மூட்டை இடைச்செருகுகட்டைகள் மற்றும் வேறு பொதியிடும் பொருட்களும் பிணைக்கும் பொருட்களுமுட்பட, கொள்கலத்தின் கொள்கலனிறைத் திரண்மத்தின் ஒன்றிணைந்த திரண்மமும் எல்லாப் பொதிகளினதும் கப்பற்சரக்கு இனங்களினதும் திரண்மங்களும் என்று பொருளாகும்;

''பொதி'' என்பது, இடம்பெயர்க்கப்படுவதற்காக ஒன்றாகக் கட்டப்பட்ட, பொதியிடப்பட்ட, சுற்றப்பட்ட பெட்டியிலடைக்கப்பட்ட அல்லது சிப்பமிடப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கப்பற்சரக்கு இனங்கள் என்று பொருளாகும். பொதிகளின் உதாரணங்கள், சிப்பங்களையும் பெட்டிகளையும், பொட்டலங்களையும், அட்டைப்பெட்டிகளையும் உள்ளடக்கும், ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படுவதில்லை;

''பொதியிடப்பட்ட கொள்கலன்'' என்பது, கவைதூக்கிகள், மூட்டைஇடைச்செருகு கட்டைகள் மற்றும் வேறு பொதியிடும் பொருட்களும் பிணைக்கும் பொருட்களுமுட்பட, திரவங்கள், வாயுக்கள், திண்மங்கள். பொதிகள் மற்றும் கப்பற்சரக்கு இனங்கள் ஏற்றப்பட்டதும் (''அடைக்கப்பட்ட''அல்லது ''நிரப்பப்பட்ட''), முன்னர் வரைவிலக் கணங்கூறப்பட்டவாறானதுமானவொரு கொள்கலன் என்று பொருளாகும்;

''கப்பல்'' என்பது, எஸ்ஓஎல்ஏஎஸ் அத்தியாயம் VI அதற்கு ஏற்புடையதாகின்ற ஏதேனும் கலன் என்று பொருளாகும். குறுகியகாலச் சர்வதேசப் பயணங்களில் ஈடுபட்டுள்ள அதன் மீது உருளும் /அதியிலிருந்து உருளும் (றோ-றோ) கப்பல்கள் இவ்வரைவிலக்கணத்திலிருந்து தவிர்க்கப்படுகின்றன; இங்கு கொள்கலன்கள் ஓர் அடிச்சட்டத்தின் மீது அல்லது இழுவண்டியின் மீது கொண்டுசெல்லப்பட்டு அத்தகையவொரு கப்பலின் மீது அத்துடன் அதிலிருந்து செலுத்தப்படுவதன் மூலம் ஏற்றவும் இறக்கவும்படுகின்றன;

''கப்பலேற்றுபவர்'' என்பது, ஏற்றுபொருட்பட்டியலில் அல்லது கடல்நெறிப்பட்டியலில் அல்லது சமமான பன்முகட்டு இடம்பெயர்த்தல் ஆவணத்தில்(உ.ம். ''ஊடான'' ஏற்றுபொருட்பட்டியலில்) கப்பலேற்றுபவராகப் பெயர்குறிப்பிடப்பட்டவரும் அல்லது அவருடன் (அல்லது அவரது பெயரில் அல்லது அவரது சார்பில்) கப்பற்றொழிற் கம்பனியொன்றுடன் ஏற்றிச்செல்லல் ஒப்பந்தமொன்று செய்து முடிக்கப்பட்டுள்ளதுமான ஒரு சட்ட உருவகம் அல்லதுஆள் என்று பொருளாகும்;

"கப்பலேற்றல் ஆவணம்" என்பது, பொதியிடப்பட்ட கொள்கலத்தின் சரிபார்க்கப்பட்ட முழுமொத்தத் திரண்மத்தை அறிவிப்பதற்குக் கப்பலேற்றுபவரினால் பயன்படுத்தப்பட்ட ஓர் ஆவணம் என்று பொருளாகும். இவ்வாவணம், கப்பற்றொழிற் கம்பெனிக்கான கப்பலேற்றல் அறிவுறுத்தல்களின் ஒரு பாகமாகவிருக்கமுடியும் அல்லது தனிவேறான தொடர்பாடலாகவிருக்கமுடியும் (உ.ம். ஒரு நிறுக்கும் நிலையத்தில் காண்பிக்கப்பட்ட எடைச் சான்றிதழுட்பட்ட ஒரு வெளிப்படுத்துகை);

"குறுகிய காலச் சர்வதேசப் பயணம்" என்பது, கப்பலானது, அதன் பயணத்தின் போது பயணிகளும் கப்பற்றொகுதியினரும் பாதுகாப்பான இடப்படக்கூடியவொரு துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து 200மைல்களுக்கு மேற்படாதிருக்கின்றதும், பயணம் எந்நாட்டில் தொடங்குகின்றதோ அந்நாட்டிலுள்ள கடைசியாகச் செல்லும் துறைமுகத்துக்கும் இறுதிச் சேரிடத்துறைமுகத்துக்கும் இடையேயான நீளம் 600 மைல்களை விஞ்சாதிருக்கின்றதுமான ஒரு சர்வதேசப் பயணம் என்று பொருளாகும்;

"முடிவிடப் பிரதிநிதி" என்பது, ஒரு கப்பல் சம்பந்தமாகத் துறைக்களக்கட்டண, கலத்துறை, தொகுப்பறை, குத அல்லது வேறு கப்பற்சரக்குக் கையாளுகைச் சேவைகளை வழங்குகின்ற தொழில் ஈடுபட்டுள்ள ஒரு சட்ட உருவாக்கத்தின் அல்லது ஆளின் சார்பில் செயலாற்றுகின்ற ஆளொருவர் என்று பொருளாகும்; அத்துடன்

"சரிபார்க்கப்பட்ட முழுமொத்தத் திரண்மம் " என்பது, முறைகளுள் ஒன்றின் மூலம் பெறப்பட்ட வாறான பொதியிடப்பட்ட கொள்கலமொன்றின் மொத்தமான முழுமொத்தமான முழுமொத்த திரண்மம் என்று பொருளாகும்.

## *அட்டவணை I*

(ஒழுங்குவிதி *4(2)*)

### கொள்கலத்தின் முழுமொத்தத் திரண்ம சரிபார்ப்பவராக/கப்பலேற்றுபவராக/நிறுக்கும் பாலத் தொழிற்படுத்துநராகத் தொழில் கொண்டுநடாத்துவதற்கான உரிமத்துக்கான அல்லது உரிமத்தைப் புதிப்பிப்பதற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பகாரரின் பெயர் :
2. பதிவுசெய்யப்பட்ட முகவரி :
3. தொலைபேசி இல. :.................... தொலைநகல் இல: .........மின்னஞ்சல் முகவரி: ................
4. பல்புடை அமைவிடங்களுக்காக, சரிபார்க்கப்பட்ட நிறுத்தல் பொறுப்பேற்கப்படும் முகவரிகள்:
5. முறை (தோதான முறையை/முறைகளைக் குறிப்பிடவும்):

| | |
|---|---|
| முறை 1 | |
| முறை 2 | |
| நிறுக்கும் பாலம் | |

6. பொறுப்பாகவுள்ள ஆளின் (ஆட்களின்) தொழிற்பாட்டுப் பணிப்பாளரின்/தேவைகளையளிக்கும் ஆளணியினர் முதலியவர்களின் பெயர் (கள்) :
7. பதவிநிலை அலுவலரின் பெயரும் கப்பலேற்றுபவர்களின் வெளிப்படுத்துகைகளைக் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றவர்களின் ஆளடையாளமும்:
8. முன்னைய ஏதேனும் உரிம இலக்கத்தின் விபரங்கள் (ஏற்புடையனவாயின்):இவ்வுரிமத்தினால் மேவப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளை முழுமையாக அறிந்துள்ளோமென இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.எமது நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டியவரை,

இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ள எல்லாத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையுமென வெளிப்படுத்துகின்றோம்.

திகதி .......................

.............................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயரும் கையொப்பமும்.

## *அட்டவணை II*

(ஒழுங்குவிதி *4(3)*)

| *விடயம்* | *ஓர் அலகுக்கான உரிமக்கட்டணம்* |
|---|---|
| *1.* கொள்கலத்தின் முழுமொத்தத் திரண்மத்தைச் சரிபார்ப்பவர் (கப்பலேற்றுபவர் /நிறுக்கும் பாலம் தொழிற்படுத்துநர்) | ரூபா 12,500.00 |
| *2.* கொள்கலப் பண்டமாற்றுத்தொழிலர், முதன்மை இயங்கி அல்லது லொறி | ரூபா 500.00 |
| *3.* இழுவண்டி | ரூபா 250.00 |

## *அட்டவணை* **II**

(ஒழுங்குவிதி *11(2)*)

கொள்கலத்தின் முழுமொத்த திரண்மத்தைச் சரிபார்ப்பவர்/முதன்மை/இயங்கி/லொறி/
இழுவண்டி என்ற தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான உரிமத்துக்கான அல்லது உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பகாரரின் பெயர் :

2. பதிவுசெய்யப்பட்ட முகவரி :

3. தொலைபேசி இல............. தொலைநகல் இல............மின்னஞ்சல் முகவரி :..................

4. வாகனத்தின் பதிவில:

5. முதன்மை இயங்கியின்/இழுவண்டியின்/லொறியின் சொத்தாண்மை விபரங்கள்:

6. முதன்மை இயங்கியின்/இழுவண்டியின்/லொறியின் முழுமொத்த எடை:

7. திரிபுபடுத்தல் ஏதேனுமிருப்பின் அதன் விபரங்கள்:

8. எடை சரிபார்த்தல் சான்றிதழ் இல:

எமது நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டியவரை, இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ள எல்லாத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையுமென வெளிப்படுத்துகின்றோம்.

தேதி :................

...................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயரும் கையொப்பமும்

*9- 62*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.